" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

**மதுரை மாநகராட்சி**

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** ***" அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்***
***பெரும்பயன் இல்லாத சொல் "***

**பொருள் :** அரும் பொருளை ஆயும் அறிவினையுடையார் வாழ்க்கைக்குப் பெரும் பயனைத் தராத சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) CW1/38324/2011**

மதுரை மாநகராட்சி சட்டம் 5ஏ–ன்படி மதுரை மாநகர நிர்வாகத்தை சிறப்பாக நிர்வகிக்கும் பொருட்டு அரசாணை எண். 310 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள் 21.08.1995-ன்படி ஏழு வட்டார அலுவலகங்கள் பிரித்து மேற்கண்ட ஏழு வட்டார அலுவலகத்திற்கு ஏழு வட்டார கமிட்டிகளை அமைக்க அறிவுரை வழங்கி வரப்பெற்றுள்ளது.

அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை அவர்களின் நேர்முக கடிதம் எண். 51154/MC4-95 நாள் 24.04.1996-ன்படி மாநகராட்சியை, சட்டம் 5ஏ–யின் படி நான்கு மண்டல அலுவலகங்கள் தோற்றுவித்து உரிய பிரேரணை அனுப்பி வைக்க கோரியதின்படி, மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 145 நாள் 24.09.1996-ன்படி நான்கு மண்டலங்களாக பிரிக்க வைக்கப்பட்ட குறிப்பில் தீர்மானம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற முன் முடிவுக்கு வைக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் (தேர்தல்) துறை அலுவலக ஆணை எண்.241, நாள் :01.10.1996-ன்படி 15.10.1996-ம் தேதிக்குள் மண்டல அலுவலகங்களை பிரித்து பிரேரணை அனுப்பி வைக்க கோரப்பட்டதின் அடிப்படையில் 24.09.1996-ந் தேதிய தீர்மானம் எண். 145 மறுபரிசீலனை செய்து கீழ்கண்டவாறு நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அரசின்

அனுமதி கோரிய ஆணையாளரின் குறிப்பு மறுபரிசீலனை செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி 01.10.1996 முதல் நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 28.09.2010-ன்படி மதுரை மாநகராட்சியை விரிவாக்கம் செய்து உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து 100 வார்டுகளாக நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆணையின்படி மதுரை மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள் மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ஊள்ளாட்சி அமைப்பின் பெயர் | மக்கள் தொகை (2001) | பரப்பளவு (ச.கி.மீ) |
|---|---|---|---|
| | மதுரை மாநகராட்சி (தற்போதைய) | 928869 | 51.82 |
| **இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகள்** | | | |
| 1 | ஆனையூர் நகராட்சி | 38310 | 15.00 |
| 2 | அவனியாவுரம் நகராட்சி | 53006 | 16.00 |
| 3 | திருப்பரஙகுன்றம் நகராட்சி | 39048 | 13.24 |
| 4 | ஹார்விப்பட்டி பேரூராட்சி | 8135 | 0.275 |
| 5 | திருநகர் பேரூராட்சி | 15547 | 5.03 |
| 6 | விளாஙகுடி பேரூராட்சி | 21167 | 6.24 |
| 7 | மேலமடை ஊராட்சி | 29098 | 5.79 |
| 8 | உத்தங்குடி ஊராட்சி | 5519 | 8.45 |
| 9 | வண்டியூர் ஊராட்சி | 21977 | 8.02 |
| 10 | கண்ணணேந்தல் ஊராட்சி | 16013 | 3.71 |
| 11 | நாகனாகுளம் ஊராட்சி | 17803 | 2.85 |
| 12 | திருப்பாலை ஊராட்சி | 9453 | 3.09 |
| 13 | சின்ன அனுப்பானடி ஊராட்சி | 15676 | 4.02 |
| 14 | சிந்தாமணி ஊராட்சி | 3833 | 2.98 |
| 15 | ஐராவதநல்லூர் ஊராட்சி | 4966 | 1.03 |
| 16 | புதுக்குளம் பிட் II ஊராட்சி | 630 | 0.34 |
| 17 | தியாகராஜர் காலனி ஊராட்சி | 965 | 0.11 |
| | மொத்தம் | 1230015 | 147.99 |

மதுரை மாநகராட்சியுடன் தற்போது 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள், 11 ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளதால், மதுரை மாநகராட்சியின் மக்கள் தொகை 2011–கணக்கின்படி 15 இலட்சத்திற்கு மேல் இருப்பதாலும், 2இலட்சத்து 55 ஆயிரம் வீட்டுவரி விதிப்பு இருப்பதாலும்,

மதுரை மாநகராட்சி பொதுமக்களும், மாமன்ற உறுப்பினர்களும் மதுரை மாநகராட்சி பணிகள் சிறப்பிக்கவும், 100 வார்டுகளாக உள்ள மதுரை மாநகராட்சியை ஏழு மண்டலங்களாக பிரித்து செயல்பட்டால் இன்னும் பணிகள் சிறப்பாக செயல்படும் என்றும் கருத்துகள் தெரிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் தற்பொழுது 100 வார்டுகளாக உள்ள மதுரை மாநகராட்சியை ஏழு மண்டலங்களாக பிரிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.86**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2) HF1/28899/11**

மதுரை மாநகராட்சியில் நலவாழ்வு மையம் 1–ல் பணிபுரிந்து வரும் டாக்டர்.S.சுதா, மருத்துவ அலுவலர் பணியில் சேர்ந்து 20 வருடங்கள் முடிந்து விட்டதால், அரசாணை எண்.583, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 26.11.2010-ன்படி அவருக்கு 19.07.2011 முதல் “ முதன்மை மருத்துவ அலுவலர் ” என பதவி உயர்வு அளிப்பதற்கும், ரூ.37400-67000, தர ஊதியம் ரூ.8700/- (PB4) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கப்பட்டு தீர்மானம் எண்.1038, நாள் : 09.02.2011–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. (H4/38805/10)

**மாமன்றத்தீர்மானம் எண்.87**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3) H4/09897/11**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மேலவாசல் மருந்தகத்தில் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் டாக்டர்.K.இஸ்மாயில் பாத்திமா 20.06.1996 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து 19.06.2006 பிற்பகல் வரை **10** வருடங்கள் முடிவடைந்து விட்டது. அவர் 13.10.2004–ந் தேதி முதல் **30.07.2009**–ந் தேதி வரை வெளிநாட்டில் பணிபுரிந்து வந்த காரணத்தால் **4** ஆண்டுகள் **9** மாதங்கள் **18** நாட்கள் அயல் பணிக்காலத்தை நீக்கம் செய்து **08.4.2011**–ந் தேதி முதல் ரூ.**15600–39100** என்ற ஊதிய விகிதத்தில் தேர்வுநிலை வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.88**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4) H1/01080/05**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டல (மண்டலம் எண்.1) வளாகத்தில் அமைத்துள்ள 24 மணி நேர EOC மருத்துவமனையில் குடும்பநல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை கால தாமதமின்றி உடனுக்குடன் வழங்குவதற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து நிரந்தர முன்பணமாக மீளப்பெறும் வகையில் ரூ. 30,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்குவதற்கு மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

குறிப்பு :

1. ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் 07.10.2011-ல் பெறப்பட்டது.
2. குடும்பநல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகைகள், அரசிடமிருந்து மாவட்ட குடும்பநல அலுவலகத்தின் மூலமாக திரும்ப பெறப்படும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.89**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) ம.பொ.4 /26270 /11**

மதுரை மாநகராட்சி நவீன நீச்சல் குளத்தை பராமரிப்பு செய்யும் பணிக்கு M/S Food என்ற நிறுவனத்திற்கு 15.10.08 முதல் 14.10.11 வரை மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தாரால் மாநகராட்சிக்கு ரூ. 10,000/- வீதம் மாதந்தோறும் செலுத்தப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கண்ட அனுமதிக்காலம் முடிவு பெற்றதால் மேலும் கால நீடிப்புக்கு அனுமதி கோரி மனுச் செய்துள்ளதின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு மாதந்தோறும் ரூ 20,000/- மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் 15% ஆண்டுதோறும் உயர்வு செய்து செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும் 15.10.11 முதல் 14.10.2014 வரை மூன்று ஆண்டுகளுக்கு ஆணையாளர் ஒப்புதல் பெற்று பராமரிப்பு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட M/S Food நிறுவனத்தினருக்கு மூன்று ஆண்டுகள் நீச்சல் குளத்தை பராமரிப்பு செய்ய வழங்கப்பட்ட அனுமதிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.90**
**பொருள் ஒத்திவைக்கப்பட்டது**

**6) H3/10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களை வேலை வாய்ப்புத்துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 60 நபர்கள் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 13.10.2011–ல் முடிவடைந்து விட்டது. பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும், **15.10.2011**– முதல் **89** நாட்களுக்கு பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்கவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.91**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டுத**

**7) HF2/17737/11**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நல வாழ்வு மையம் 17–ல் பணிபுரிந்து வரும் டாக்டர்.R.பேபி அமுதா மருத்துவ அலுவலர் **21.03.2000** மு.ப. முதல் பணியில் சேர்ந்து **10** வருடங்கள் முடிந்துவிட்டதால் **21.03.2010** முதல் ரூ.15600-39100 G.P. 5400 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.92**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) A3/38818/11**

மதுரை மாநகராட்சி கல்விப்பிரிவு **1.4.90** முதல் பொதுப்பிரிவில் இருந்து பிரிக்கப்பட்டு தனிப்பிரிவாக ஆணையாளர் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை **–5** அவர்களின் கடிதம் ந.க.எண்.53194/11/H3, நாள் **:05.12.11–**ல் கல்விப் பிரிவை கல்வித்துறையிடம் ஒப்படைப்பது சார்பான சாத்தியக்கூறுகள் பற்றிய அறிக்கை ஒன்று தமிழ்நாடு அரசு கோரியுள்ளதாகவும், எனவே அப்பொருள் சார்பாக மாமன்றத்தின் கருத்தை அறிந்து அறிக்கை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. மாமன்றத்தின் கருத்தை அறிந்திட கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.93**
**மாநகராட்சி பள்ளிகளை தொடர்ந்து மாநகராட்சி நிர்வாகமே நடத்திட மாமன்றம் தீர்மானிக்கின்றது**

**9) ம.நி.1/42939/2007**

மதுரை மாநகராட்சி தெருவிளக்குப்பிரிவில் அயற்பணியின் கீழ் உதவி மின்பொறியாளர்களாக பணிபுரியும் நான்கு நபர்களுக்கு அயற்பணி காலம் ஒரு வருடத்திற்கு நீடிப்பு செய்து தமிழ்நாடு உற்பத்தி மற்றும் வநியோக நிறுவனம் (TamilNadu Generation and Distribution Corporation Ltd.) TANGEDCO அரசு நிறுவனத்திடமிருந்து உத்தரவு வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | அயற்பணியில் பணிபுரியும் உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்) | அயற்பணி நீடிப்புக் காலம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமச்சந்திரன் | 04.11.2011 முதல் 03.11.2012 முடிய |
| 2 | திரு.வி.முத்துகிருஷ்ணன் | 18.11.2011 முதல் 17.11.2012 முடிய |
| 3 | திரு.கே.ஜி.சாந்தாராம் | 07.12.2011 முதல் 06.12.2012 முடிய |
| 4 | திரு.ஆர்.குமார் | 11.12.2011 முதல் 10.12.2012 முடிய |

மேற்கண்ட நான்கு நபர்களுக்கும் மேற்கண்டவாறு நீடிப்பு செய்து வரப்பெற்றுள்ள தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனம் (TamilNadu Generation and Distribution Corporation Ltd.) Administrative Branch (per) FB CMD TANGEDCO Proc.No.19, நாள் 21.11.2011–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர்அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.94**
**பொருள் ஒத்திவைக்கப்பட்டுத**

**10) H6/35045/2011**

இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவி தொகை திட்டத்தின் கீழ் பயன் பெற உள்ள பயனாளிகள் பட்டியல் மதுரை மநகராட்சிக்கு உட்பட்ட வடக்கு வட்டத்தில் 1700 நபர்களும் மற்றும் தெற்கு வட்டத்தில் 1179 நபர்களும் ஆக மொத்தம் **2879** நபர்கள் பட்டியல் அனுப்பப்பட்டு, அனைவரும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்பவர்கள் என்றும், மேற்கண்ட பட்டியலில் கண்ட நபர்களை மதுரை மாநகராட்சி மாமன்ற ஒப்புதலை பெற்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வட்டாட்சியர் வடக்கு, மற்றும் தெற்கு அவர்களிடம் இருந்து கடிதம் வரப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பட்டியலில் உள்ள மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள வடக்கு வட்டம் 1700 நபர்கள், தெற்கு வட்டம் 1179 நபர்கள் ஆக மொத்தம் 2879 நபர்களும் அடங்கிய வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள பட்டியலினை மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.95**

**பொருள் ஒத்திவைக்கப்பட்டது**

**11) H6/39024/2011**

வார்டு 64 மாமன்ற உறுப்பினர் அவர்கள் 30.11.11–ல் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக ஆக்கப்பட்டுவிட்டதால், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள நபர்கள் கணக்கெடுத்து பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், புதிய கணக்கெடுப்பு செய்து வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் பட்டியல் தயார் செய்யுமாறு கோரியுள்ளார்கள்.

தற்போது மதுரை மாநகராட்சி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கணக்கெடுப்பு 1 முதல் 72 வரை உள்ள வார்டுகள் மட்டுமே உள்ளது. இப்பணியெடுத்து பத்து ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. அரசு விதிகளின்படி புதிய வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் 1 முதல் 100 வரை உள்ள வார்டுகளுக்கு 2011–2012–ம் ஆண்டிற்கு கணக்கெடுப்பு பணிகள் தொடங்குவதற்கு மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.96**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12) மதி.1/38956/2011**

மதுரை மாநகராட்சி – இராஜீவ் வீட்டு வசதி திட்டம் – குடிசைமாற்று வாரியம் – சுடலைமுத்துப்பிள்ளை சந்து (டோபி காலனி) குடிசை பகுதி சர்வே எண் :1, பிளாக் –17, புல எண்.483/8 விஸ்தீரணம் 1.12 ஏக்கர் நிலம் முன்னுழைவு அனுமதி பெறுவது தொடர்பாக நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மதுரை அவர்களின் கடித எண் :ந.க.எண்:796/B உதவிபொறியாளர் (திட்டம்) 2011, நாள் :09.12.2011 வரப்பெற்றுள்ளது.

அரசாணை எண்:104, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் :22.07.2011–ல் இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தினை தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் குடிசையற்ற மற்றும் வறுமைக்குறைப்பு நகராக உருவாக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைக்கு இணங்க 26.09.2011 அன்று ஆணையாளர் மதுரை மாநகராட்சி மற்றும் நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்கள், சுடலைமுத்துப்பிள்ளை (டோபி காலனி) குடிசைப்பகுதியில் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்குடிசை பகுதிஅமைந்த நிலம் ஆட்சேபணையில்லாத நத்தம் குடியிருப்புப் பகுதியாகும். இதில் வசிக்கும் மக்கள் அனைவரும் சலவைத் தொழிலாளர்கள். தல ஆய்வின் போது பொதுமக்கள் ஆணையாளர் அவர்களிடம் தங்கள் வாழ்வாதாரம் மற்றும் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படாமலும் தற்போது இருக்கும் இடத்திலேயே வீடு கட்டித்தருமாறு கேட்டுக் கொண்டனர்.

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுடலை முத்து பிள்ளை சந்து (டோபி காலனி) குடிசைப்பகுதி சர்வே வார்டு எண். ஐ, பிளாக் : 17, புல எண்.483/8, விஸ்தீரணம் 1.12 ஏக்கர் மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். ஆகவே இந்த இடத்தில் வசித்து வரும் மக்களுக்காக, வாடகை அடிப்படையில் இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக பணிகளை மேற்கொள்ள முன்னுழைவு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கடித நாள் :09.12.2011–ன்படி இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக பணிகளை மேற்கொள்ள முன்னுழைவு வழங்க மாமன்ற ஒப்புதலுடன் அரசை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.97**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13) மதி.1/38957/2011**

மதுரை மாநகராட்சி – இராஜீவ் வீட்டு வசதி திட்டம் – குடிசைமாற்று வாரியம் – ஒபுளா படித்துறை குடிசை பகுதி சர்வே எண் :1X பிளாக் –12, புல எண்.1216/2, விஸ்தீரணம் 0.18 ஏக்கர் நிலம் முன் நுழைவு அனுமதி பெறுவது தொடர்பாக கடித எண் :ந.க.எண்:796/A உதவிபொறியாளர் (திட்டம்) 2011, நாள் :09.12.2011 நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

அரசாணை எண்:104, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் :22.07.2011–ல் இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தினை தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் குடிசையற்ற மற்றும் வறுமைக்குறைப்பு நகராக உருவாக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைக்கு இணங்க 26.09.2011 அன்று ஆணையாளர் மதுரை மாநகராட்சி மற்றும் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று பகுதிகளில் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்குதியில் மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த கல்நார் வீடுகளில் மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அதைச்சுற்றி ஆக்கிரமிப்பாளர்களும் குடியிருந்து வருகின்றனர். இந்த குடிசைப் பகுதிஅமைந்த நிலம் ஆட்சேபணையில்லாத குடியிருப்பு பகுதியாகும். தல ஆய்வின் போது பொதுமக்கள் ஆணையாளர் அவர்களிடம் தங்கள் வாழ்வாதாரம் மற்றும் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படாமலும் தற்போது இருக்கும் இடத்திலேயே வீடு கட்டித்தருமாறு கேட்டுக் கொண்டனர்.

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஒபுளா படித்துறை குடிசைப்பகுதி அமைந்துள்ள நிலம் சர்வே எண்.1X பிளாக் –12, புல எண்.1216/2, விஸ்தீரணம் 0.18 ஏக்கர் மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். ஆகவே இவ்விடத்தில் வசித்து வரும் மக்களுக்காக, வாடகை அடிப்படையில் இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக பணிகளை மேற்கொள்ள முன்நுழைவு வழங்கமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கடித நாள் :09.12.2011–ன்படி இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக பணிகளை மேற்கொள்ள முன்னுழைவு வழங்க மாமன்ற ஒப்புதலுடன் அரசை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.98**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 23.12.2011**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) மதி.1/38954/2011**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் சென்னை, மதுரை மாநகராட்சி நீங்கலாக கட்டிட வரைபட அனுமதி பரிசீலனையில் 1972-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதி 1972 பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மதுரை நகராட்சி 1971–ம் ஆண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சிக்கென தனியான கட்டிடவிதி ஏதும் இயற்றப்படாத நிலையில் கட்டிட அனுமதி வழங்குவதில் கட்டிட விதிகள் பரிசீலனை குறித்து அரசின் தெளிவுரை கோரியதில் அரசாணை எண்:1015 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் :19.05.1973-ல் மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 4(3)ல் கண்டுள்ளவாறு மதுரை நகராட்சி மாநகராட்சியான தேதிக்கு முன்பு நடைமுறையில் இருந்த 1942–ம் வருடத்திய திருத்திய கட்டிட விதி பரிசீலனைக்கு உட்படுத்தி அனுமதி வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியை பொறுத்தமட்டில் 1942ம் வருடத்திய திருத்திய கட்டிட விதிகள் நடைமுறையில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 1972–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் கட்டிடவிதிகள் நடைமுறையில் உள்ளது. எனவே மதுரை மாநகராட்சியிலும் கட்டிட அனுமதி வழங்குவதில் 1942-ம் வருடத்திய திருத்திய கட்டிட விதிகளுக்கு மாறாக 1972-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் கட்டிட விதியினை அமல்படுத்தி கட்டிட அனுமதி வழங்க நடைமுறைக்கு கொண்டுவருவதற்கும், இதே போன்று மதுரை மாநகராட்சிக்காக அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள் (Multistoried and public Buildings rules) தனியாக இல்லை. எனவே தமிழ்நாடு அடுக்குமாடி கட்டிடம் மற்றும் பொதுக்கட்டிட விதிகள் 1973-ஐ மதுரை மாநகராட்சியில் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கும் அரசின் அனுமதி கோருவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.99**
**பொருள் ஒத்திவைக்கப்பட்டது**

**2) HF2/32523/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் 12–ல் பணிபுரிந்து வரும் டாக்டர்.R.ராஜப்பிரியா, மருத்துவ அலுவலர் பணியில் சேர்ந்து இரண்டு வருடங்கள் முடிந்து விட்டதால், மருத்துவ அலுவலர் பணியிடத்தில் அவருக்கு 29.09.08 முற்பகல் முதல் பணிவரன் முறைப்படுத்தியும், 28.12.2010 பிற்பகல் முதல் தகுதிகாண்பருவம் திருப்திகரமாக முடித்ததாகவும் அறிவிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.100**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா
மேயர்
மதுரை மாநகராட்சி

நாள் : 23 .12.2011
மதுரை.

* * * * * * * *